www.Padasalai.Net

**தமிழ் நாடு, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**

**மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்**

**பிறப்பிப்பவர் திருமதி. மா. ஆர்த்தி, இ. ஆ. ப**

**ந.க.எண் :** 1292 **/ஆ2/நா. மு-10/ஒபக/2024, நாள்:11.09.2024**

**பொருள் :** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - நான் முதல்வன் திட்டம் - 2024 - 2025 கல்வியாண்டு - அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள 9,10,11, மற்றும் 12 ஆம் வகுப்பு - உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் - EMIS இணையதளத்தில் பதிவு செய்தல் - சார்ந்து.

**பார்வை:** 1. தமிழ்நாடு மாதிரிப் பள்ளி உறுப்பினர் செயலரின் கடிதம் ந. க. எண்:98/L1/ CG-16 2023, நாள்:21.06.2023

2. தமிழ்நாடு மாதிரிப் பள்ளி உறுப்பினர் செயலரின் கடிதம் ந. க.எண்:680/L1/CG - 52 /MS/2024, நாள் :12.07.2024

*****

பார்வையில் காணும் செயல்முறைகளின் படி, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 2023 - 2024 ஆம் கல்வியாண்டில் 9,10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து உயர்கல்வி பயிற்சி பெற்ற உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களை EMIS இணையதளத்தில் தங்களுடைய பெயரினைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக, நடப்பு கல்வியாண்டில் 2024 - 2025 இல் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்று, இதுவரை EMIS இணையதளத்தில் பதிவு செய்யாத பள்ளிகளின் விவரங்கள் இணைப்பு -1 இல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இணைப்பு - 2 இல் பதிவு செய்த ஆசிரியர்களின் விவரங்கள் வழங்கப்பட்டுள்ளது. அப்பட்டியலில் உள்ள உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களில் எவரேனும் பணிபுரிந்த பள்ளியில் இருந்து பணி மாறுதல் அல்லது பணி நிறைவு பெற்றிருப்பின் அந்த ஆசிரியர்களுக்கு பதிலாக புதிய உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களை 250 மாணவர்களுக்கு 1 உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் என்ற விகிதத்தில் சார்ந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தெரிவு செய்து 16.09.2024 முதல் 23.09.2024 ஆம் தேதிக்குள் EMIS இணையதளத்தில் பதிவு செய்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

www.Padasalai.Net

**உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் தங்களுடைய பெயரினை EMIS இணையதளத்தில் பதிவு செய்யவில்லை எனில், அவர்களால் உயர்கல்வி வழிகாட்டி பயிற்சிக்கான வருகைப் பதிவு மற்றும் மதிப்பீட்டுத் தேர்வினை மேற்கொள்ள இயலாது.**

எனவே, அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தக்க வழிகாட்டுதல்கள் வழங்கி அனைத்து உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், EMIS இணையதளத்தில் பதிவு செய்வதனை உறுதி செய்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :**

1. EMIS இணையதளத்தில் பதிவு செய்யாத பள்ளிகளின் விவரங்கள் ( வகுப்பு 9,10,11 மற்றும் 12 )
2. வகுப்பு 9,10 மற்றும் 11,12 பதிவு செய்த உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் விவரம்.
3. EMIS இணையதளத்தில் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களாக பதிவு செய்வதற்கான மாதிரி காணொளி.

மாநிலத் திட்ட இயக்குநருக்காக

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

**நகல்**

1. பள்ளிக் கல்வித் துறை இயக்குநர், சென்னை 06.
2. செயலர், ஆதி திராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை
3. செயலர், வனத்துறை, சென்னை
4. செயலர், பிற்படுத்தப்பட்டோர். மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை, சென்னை
5. செயலர், தமிழ்நாடு மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, சென்னை
6. அனைத்து அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் . (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)

www.Padasalai.Net

| வ.எண் | இணைப்பு | QR CODE |
|---|---|---|
| 1. | 1. EMIS இணையதளத்தில் பதிவு செய்யாத பள்ளிகளின் விவரங்கள் ( வகுப்பு 9,10,11 மற்றும் 12 ) | |
| 2. | 2.வகுப்பு 9,10 மற்றும் 11,12 பதிவு செய்த உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்கள் விவரம். | |
| 3. | 3.EMIS இணையதளத்தில் உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர்களாக பதிவு செய்வதற்கான மாதிரி காணொளி. | |